REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

திமுக தினஇதழ் — அதிகாரப் பூர்வ பத்திரிகை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 9உ புதன் (22—5—57) ★ வெளியூர்: வைகாசி 10உ வியாழன் (23—5—57) இதழ் [294

என்னே தாராளம்!

புதுடில்லி, மே 22—

கடந்த ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன் வழங்கி யிருக்கிறதல்லவா, சென்னை சர்க்கார்!

இந்தக் கடன் வழங்குவதற்காக டெல்லி சர்க்காரிடம் கடன் கேட்டிருந்ததாம், இந்த மாநில சர்க்கார்!

இப்போது 4-சதவிகித வட்டிக்கு 10 ஆண்டுகளில் திருப்பித் தந்துவிடவேண்டும் என்ற நிபந்தனையுடன் ரூ. 1-கோடி கடன் வழங்கியுள்ளதாம் டெல்லி சர்க்கார், சென்னை சர்க்காருக்கு! என்னே தாராளம்!!

'இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும்'

ரூ. 50 கோடி அதிகரிப்பால் பலன் உண்டா?'

'ஏழைகளை வாட்டுவதுதான் நிதி திரட்டும் வழியா?

'மந்திரிகளின் ஆடம்பரம் குறைய வேண்டும்'

மாநிலங்கள் சபையில் பி.சோ. உறுப்பினர் குரல்

புதுடில்லி, மே 21—

"வரவு-செலவுத் திட்டத்தின் மொத்த விளைவு, சமூகத்தின் இதர பிரிவினரையும்விட, சாதாரண ஏழை எளிய மக்கள் அதிகமான தியாகங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டுமென்பதுதான்.

"ஏராளமான பொருள்களின்மீது வரி விதிப்பதினால் ஏழை எளியோரின் அனுதாபத்தை வெறுப்பாக மாற்றிவிட்டால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றியை உறுதிசொல்ல முடியாது போய்விடும்.

"இரண்டாம் திட்டத்தின் அளவைச் சுருக்க வேண்டுமென நான் கூறவில்லை; மாறாக, திட்டத்திற்கு நிதி சேகரிப்பதில் வேறு வழிகளைத் தேடியாக வேண்டும்.

"இராணுவத்திற்கு என்று இந்த ஆண்டு ரூ. 253 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது; இதனைக் குறைத்தாக வேண்டும். இந்த ஆண்டில் இராணுவச் செலவு ரூ. 50 கோடி வரை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; இந்த அதிகச் செலவினால் மட்டும் நாட்டின் தற்காப்பு வலிமை எந்த வகையாலும் உருவான மாற்றத்தைப் பெற்றுவிடாது.

"மேலும், சர்க்காரின் சிவில் துறை செலவுகளையும் குறைப்பதற்கு வாய்ப்பு உண்டு,"

என்பதாக, கிஷன்சந்த் என்ற பிரஜா-சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த எம்.பி., மாநிலங்கள் சபையில், 'பட்ஜெட்' பற்றிப் பேசுகையில் கூறியிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், 'மந்திரிகள் சிக்கனமானதோர் வாழ்க்கை நடத்தவேண்டும்,' என்றும் கூறியிருக்கிறார்.

பட்ஜெட் மீது பேசிய மற்றொரு எம். பி.-யான ஹெக்தே என்பார், 'சர்க்கரை, உருக்கு, சிமெண்டு இவற்றின் மீது வரி உயர்த்தப்பட்டிருப்பது அன்னியச் செலாவணியைப் பெற்றுத்தர உதவும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சத்தியநாராயணா என்ற கிய மன உறுப்பினர் பேசுகையில் கூறியதாவது:—

"வரி விதிப்புத் திட்டங்கள், ஏழை எளிய மக்களுக்கு உதவுவதாக இல்லை. அவர்களது வாழ்க்கைத்தரம் உயரப் போவதில்லை. அவர்களுக்கு உபரி வருமானமும் கிடைக்கப்போவதில்லை.

"எந்தச் சாதாரண மக்களின் பெயரால் தேர்தல் நடத்தி சர்க்கார் அமைந்து இயங்குகிறதோ, அந்தச் சாதாரண ஏழை—எளிய மக்களைப் பற்றி — அவர்களுக்கு ஏதேனும் நன்மை செய்யவேண்டுமே என்பது பற்றி நாம் கவலையோடு சிந்திப்பதே இல்லை எனலாம்.

"இந்த நிலையில், அவனது நிலையில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட இன்னும் ஐந்தாறு தலைமுறைகள் ஆகும்போலத் தோன்றுகிறது."

மேலும் பேசிய சத்தியநாராயணா அவர்கள், 'ஒவ்வொரு பிரதேசமும் உணவு உற்பத்தி, மற்றும் தொழில்வளம் இவற்றில் தன்னிறைவு பெறும்வண்ணம், பல பிரதேசங்களும் ஒத்த வளர்ச்சி பெறுமாறு செய்ய வேண்டும்; மேலும் இப்போதுள்ள வளர்ச்சித்துறை ஏற்றத் தாழ்வுகள் ஒழியவேண்டும்,' என்றும் கூறியிருக்கிறார்.

சபையில் பேசிய பலரும்—சில காங்கிரசாரைத் தவிர—சர்க்காரின் வரி விதிப்பு உத்தேசத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

சோஷலிஸ்டுகள் போராட்டத்தில் 1,576 பேர் கைது

இலக்குமணபுரி, மே 22—

உத்திரப் பிரதேச மாநிலத்தில் சோஷலிஸ்டுகள் நடத்திவரும் போராட்டத்தில் இதுவரையில் 1,576 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செலவு

260 - கோடி டாலர் குறைப்பு

அமெரிக்க பாதுகாப்பு இலாகா செலவில் 258,67,75,000 டாலர்களைக் குறைக்கும்படி பிரதிநிதிகள் சபையின் நிதி ஒதுக்கல் குழு சிபாரிசு செய்துள்ளது.

அமெரிக்க இராணுவம், கடற்படை, விமானப் படைக்கு 3612,80,00,000 கோடி டாலர் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தடை உத்தரவு நீடிக்கிறது!

சென்னை, மே 22—

மே 8-ந் தேதியிலிருந்து மே 22-ந் தேதி வரையில் மக்கள் கூடுவதையும், ஊர்வலங்கள் நடத்துவதையும் தடை செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, மேற்கொண்டு ஜுன் 5-ந் தேதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 46 கோடி பற்றுக்குறையாம்!

பாட்னா, மே 22—

பீகார் மாநில வரவு - செலவுத் திட்டம் (1957 - 58ம் ஆண்டுக்குரியது) சட்டசபையில் நிதி மந்திரி அனுக்கிரக நாராயண சின்ஹா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் ரூ. 46·27 கோடி பற்றுக்குறை இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

செலவு ரூ. 95·43 கோடி என்றும், வரவு ரூ. 48·16 கோடிதான் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வானொலி லைசென்சுகள்

புதுடில்லி, மே 21—

1955—56-ம் ஆண்டில் 11,39,721 ரேடியோ லைசென்சுகள் வழங்கப்பட்டனவாம்; 1956-57-ம் ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றனவாம்.

சில சந்தர்ப்பங்களில்

மரண தண்டனையைக் குறைக்க மாநில சர்க்காருக்கு அதிகாரமில்லை

கேரள மந்திரி சபை நடவடிக்கை எதிரொலி

மக்கள் சபையில் பண்டித பந்த் தகவல்

புதுடில்லி, மே 21—

"சில சந்தர்ப்பங்களில், மாநில சர்க்கார், ஒருவரின் மரண தண்டனையைக் குறைக்க முடியாது; மாநில சர்க்காரே மரண தண்டனையைக் குறைக்க வேண்டுமெனக் கோரி எழுந்த மனுவை நிராகரித்தபின், மனு, குடியரசுத் தலைவரின் கைக்கு வந்தபின், ஒருமாநில சர்க்காருக்கு அந்த மனுதாரரின் தண்டனையைக் குறைக்கும் அதிகாரம் இல்லை. விவகாரம் குடியரசுத் தலைவரின் அதிகார வரம்புக்குட்பட்டதாகி விட்டபின்—குடியரசுத் தலைவர்தான் உயர்ந்த அதிகாரம் படைத்தவர் என்ற முறையில் அவரது ஆளுகைக்கு வந்துவிட்டபின், அந்த விவகாரத்தை வேறெவரும் கையாள முடியாது"

என்று, மக்கள் சபைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் கூறியிருக்கிறார்.

"கேரள சர்க்கார் மரண தண்டனையைக் குறைத்தார்களே! அதில் எத்தனை கம்யூனிஸ்டுகளின் தண்டனை குறைந்தது? இப்படி தண்டனை குறைக்கப்பட்டவர்களில், கவர்னர் மற்றும் குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்டவர் எத்தனை பேர்?" என்றும் ஒரு கேள்வி எழுந்தது.

இதற்குப் பதிலளிக்கையில்,

"எத்தனை பேர் என்று சரியாகக் கணக்கிட்டுக் கூறுவதற்கில்லை; ஆனால், தண்டனை குறைக்கப்பட்டவர்களில் கம்யூனிஸ்டுகளும் இருக்கிறார்கள்; மேலும் கவர்னராலும், பின்னர் குடியரசுத் தலைவராலும் கருணை மனு நிராகரிக்கப்பட்டவர் ஒருவரும் இருக்கிறார்; ஆனால், அவர் இன்னும் தூக்கிலிடப்படாமலிருக்கிறார். இது குறித்து சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனர்"

என்று உள்நாட்டு ராஜாங்க மந்திரி பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

கேள்வி

"பலருடைய மரண தண்டனையைக் குறைத்தும், அரசியல் கைதிகளுக்கு விடுதலை அளித்தும் தற்போதைய கேரள சர்க்கார் உத்தரவிட்டது, மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டுதானா?" என்று எ. எம். தாமஸ், மற்றும் இருவர் கேட்டிருந்தனர்.

கேட்கவில்லை

இதற்குப் பதிலளித்த மந்திரி தத்தார், 'கேரள சர்க்காரின் அறிவிப்பு குறித்து எங்களை அவர்கள் கேட்கவில்லை. சிலருடைய மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி கேரள சர்க்கார் சிபாரிசு செய்துள்ளனர். அவை குறித்துப் பரிசீலித்து வருகிறோம்; அவ்வளவுதான்' என்று கூறினார்.

ஏன் கவலை?

'மரண தண்டனையை ரத்து செய்வதற்கு மாகாண சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்பதால், இந்த விஷயம் மக்கள் சபையில் விவாதிக்கப்படத் தேவை இல்லை' என்றும், 'மத்திய சர்க்காருக்குக் கவலை இல்லாத இந்த விஷயம் பற்றி ஏன் இங்கு விவாதம்?' என்றும், சில கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் விவாதித்திருக்கின்றனர்.

இதற்குப் பதிலளிக்கையில் மந்திரி பந்த், 'சில சந்தர்ப்பங்களில் மாகாண சர்க்காருக்கு அந்த அதிகாரம் கிடையாது' என்று வாதிட்டிருக்கிறார்.

[டி. வாசுப் பிள்ளை என்ற கம்யூனிஸ்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட கேரளர்; அவரது கருணை மனு, மாகாண சர்க்கார், கவர்னர், குடியரசுத் தலைவர் ஆகியோரால் நிராகரிக்கப்பட்டு விட்டது. அவரது மரண தண்டனைதான் நிறைவேற்றப்படாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.]

இலங்கைவாழ் நாடற்றமக்கள்— பண்டிதரின் புதிய விளக்கம்

'குறிப்பிடத்தகுந்த மாற்றம் இல்லை' எனக்கூறி பிரச்சினையை மழுப்புகிறார்

புதுடில்லி, மே 21—

"இலங்கையில் உள்ள 'இந்தியர்'கள் நாடற்றவர்களாக்கப் படும் பிரச்சினை குறித்து, இலங்கை சர்க்காரின் போக்கில் எந்தவிதக் குறிப்பிடத் தகுந்த மாற்றத்தையும் நான் காணவில்லை"

என்று, இலங்கை சென்று திரும்பியுள்ள நேரு பண்டிதர் மாநிலங்கள் சபையில் கூறியுள்ளார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

"இந்த விவகாரம் குறித்து, முழுவதுமாக இலங்கைப் பிரதமருடன் விவாதிக்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை; என்றாலும், நாங்கள் பேசிய பல விவகாரங்களிடை இதுவும் ஒன்றாக இருந்தது.

"நான் இலங்கை சென்றிருந்தபோது, இந்த நாடற்றவர்களின் பிரதிநிதிகள் எவரும், என்னிடம் எதும் முறையிட்டுக் கொள்ளவில்லை; ஆனால், நான் பல சந்தர்ப்பங்களில் அவர்களைக் கூட்டம் கூட்டமாகக் கண்டேன்.

"இந்தியக் குடிமக்களைப் பற்றியதல்ல, இலங்கையில் உள்ள பிரச்சினை! ஆனால், இந்தியக் குடிமக்களல்லாதவர்கள், இலங்கையில் பல தலைமுறைகளாக வசிப்பவர்கள்; அவர்களைப் பற்றியது பிரச்சினை; அவர்களை, இலங்கை சர்க்கார் குடிமக்களாக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை"

மேலும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், பண்டித நேரு கூறியதாவது:—

"இந்தியக் குடிமக்களைப் பொறுத்த மற்றொரு பிரச்சினையும் இருக்கிறது.

"இந்தியக் குடிமக்களாயிருந்து, அங்கு தங்கிக்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—5—57 புதன்

தற்கொலை ஒத்திகை!

'அணு ஆயுத வல்லரசு' என்ற போலிப் பெருமை தனக்குக் கிடைத்துவிட்டதாக நினைத்து மகிழ்கிறது பிரிட்டன், அண்மையில் அது நடத்திய நீர்வளிக் குண்டு வெடிப்புச் சோதனையின் மூலம்!

'எங்கள் வாழ்வைச் சாம்பலாக்கிவருகின்றனர்' என்று எண்ணி வேதனைப்படுகின்றனர், அந்த சோதனையால் பாதிக்கப்பட்டுவரும் தென்கிழக்கு ஆசிய மக்கள்—குறிப்பாக ஜப்பானியர்!

'வேண்டாம்' என்ற வேண்டுகோளும், 'கூடாது' என்ற கண்டனமும், 'மறியல் செய்கிறோம்' என்ற எதிர்ப்பு முழக்கங்களும் பொருட்படுத்த வேண்டியனவாகப்படவில்லை, பிரிட்டனுக்கு!

'ரஷ்யா வைத்திருக்கும் அணு ஆயுதங்களால் நாங்கள் பாதிக்கப்பட்டால், எங்களைத் தற்காத்துக்கொள்ள நாங்கள் அமெரிக்காவை அல்லவா எதிர்பார்த்து நிற்கவேண்டிவரும்? எங்களிடமே அந்த ஆயுதங்கள் இருந்துவிட்டால், அந்தக் கையேந்தும் நிலை ஏற்படாதல்லவா?' என்று, தங்கள் அருவெறுக்கத்தக்க செயலுக்கு தரும நியாயம் கற்பிக்க முயன்றிருக்கின்றனர், பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினர்!

பிரிட்டன் இப்போது, அணு ஆயுதங்களைப் உற்பத்தி செய்து பரிட்சித்துப் பார்த்துவரும் வல்லரசுகளுள் மூன்றுவதாகும். ஏற்கனவே அமெரிக்காவும் ரஷ்யாவும், அத்தகு வல்லரசுகளாக இருந்துவருகின்றன.

இந்த முப்பெரும் வல்லரசுகளைப்போலவே, உலகில் மற்றொரு பெரும் வல்லரசான பிரான்சும், தனக்கும் இந்த ஆயுதங்கள் தேவை என்பதை உணர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது; இந்த ஆசை செயல்படும் நாள் சிக்கிரமே வரும் என்றும் நம்பப்படுகிறதாம்.

இப்படி, உலகின் மிகப் பெரிய வல்லரசுகளாகத் திகழுபவை, தங்கள் தங்கள் பாதுகாப்பிற்கென்று கூறி அணு ஆயுத சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

ஏற்கனவே அமெரிக்காவும், ரஷ்யாவும் இந்த அணு ஆயுத உற்பத்தியில் விற்பன்னர்கள் ஆவதற்கு என்றும், பரஸ்பரத் தற்காப்பிற்கு என்றும் காரண விளக்கம் தந்து அணு ஆயுதங்களை வெடித்துப் பரிசோதனை நடத்தியபோதே, உலகெங்கிலுமிருந்து—குறிப்பாக ஆசியாவிலிருந்து கண்டனங்கள் வலுத்தன; என்றாலும், அந்த நாடுகள் பிடிவாதப் போக்கையே வெளிக்காட்டின. பிரிட்டனும், அந்தப் பிடிவாதத்தைக் கைக்கொண்டது!

அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள்கூட, 'இந்த அணு ஆயுதங்களை யுத்த காலத்தில் உபயோகிப்பதனால் மட்டுமல்ல—சாதாரணமாக வெடித்துப் பரிசோதனை நடத்துவதேகூட மனித இனத்தின் எதிர்காலத்தைக் கருக்கும் ஆபத்தான விளைவுகளைக் கொண்டதாகும்' என்று எச்சரித்திருக்கின்றனர்.

வெடிப்புகள் உண்டாக்கக்கூடிய திங்குகளின் அளவு குறித்துத்தான், சில விஞ்ஞானிகளிடை கருத்து வேற்றுமை; வெடிப்புகள் பல குரூரங்களைப் படைக்கும் அழிவாற்றல் கொண்டது என்பது சந்தேகமற நிரூபிக்கப்பட்டுவிட்ட ஒன்றாகும்.

தங்களுக்கு ஒரு சந்ததி இருக்க வேண்டுமெனக் கருதும் எவரும் இந்த அணு ஆயுதச் சோதனைகளைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஆசிய மக்கள்—குறிப்பாக ஜப்பான் நாட்டு மக்கள், இந்தச் சோதனைகளினால் நேரடியாகப் பாதிக்கப்படுகிறவர்களாயிருக்கின்றனர் என்பதால் இந்தச் சோதனைகளுக்கு எதிரான கண்டன முழக்கத்தில், அவர்களின் குரல்தான் ஓங்கி நிற்கிறது என்பதில் வியப்பில்லை.

கடந்த காலத்திலும், தொடர்ச்சியாகவும் உலகின் இந்தத் திசையிலிருந்து ஒலித்துக்கொண்டிருக்கும் இந்தக் கண்டன முழக்கம், அணு ஆயுத வல்லரசுகளிடை — குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளிடை எந்தவித மதிப்பையும் பெறாமல் போய்விட்டன என்பது, கவலையோடு எதிர்கால நடவடிக்கைகள் பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றது.

அணு ஆயுதச் சோதனைகளை நடத்திக்கொண்டு, அந்தப் பயங்கர வெடிப்புகளுக்கு நியாயம் கூறிக்கொண்டே வல்லரசுகள், ஆயுதப் பரிகரணம் பற்றி இலண்டனில் கூடிப் பேசுவது அவர்களது நோக்கத்தைச் சந்தேகிக்கவே உதவுவதாக இருக்கிறது. என்றைக்காவது யுத்தம் வரும் என்ற நம்பிக்கைதான், இந்த வல்லரசுகளுக்கு தங்களைத் 'தயாரித்து'க்கொள்ளத் தூண்டுகின்றனவா? யுத்தம் வேண்டுமெனத் தான் இந்த வல்லரசுகள் கருதுகின்றனவா? அதற்குத்தான், அணு குண்டுகளை வெடித்துச் சோதனை பார்க்கின்றனவா?

அப்படியானால், இவை தற்கொலைக்குத்தான் ஒத்திகை நடத்துகின்றன. இந்தத் தற்கொலை முயற்சிக்கு எதிராக ரஷ்யா முன்வைத்த சில உருப்படியான திட்டங்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன.

உலகம், மீண்டும் ஒரு கோர யுத்தத்தில் சிக்காமலிருக்குமா என்ற சந்தேகக் குறி தலைதூக்கிவிட்டது.

உலகமே—மனித இனமே பூண்டற்றுப் பொசுங்கிப் போகும் அபாயத்திலிருந்து எப்படித்தான் தப்பப்போகிறதோ!

நெய்வேலி பகுதியில் வெளியேற்றப்பட்டவர்கள்

நெய்வேலி திட்டத்தையொட்டி நிலத்தை வசப்படுத்துவதால், தலைமுறை தலைமுறையாக அங்கு குடியிருந்தோர் இடம் பெயர வேண்டியுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் கட்சியின் தீவிர உறுப்பினர்கள்

"தவறான வழியில் சொத்துக்கள் பெற்றிருக்கின்றனரா?"

விசாரணை குழு வேண்டும் என வற்புறுத்தல்

பாட்டியாலா, மே 20—

"ஆட்சியில் உள்ள குற்றங்குறைகளை தைரியமாக எடுத்துக் காட்ட கண்டனம் தெரிவிக்க காங்கிரஸ்காரர்களும் முன்வர வேண்டும்" என்று, அ. இ. காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமந்நாராயணன், பாட்டியாலா அம்பாலா பகுதி காங்கிரஸ் ஊழியரிடை பேசுகையில் தெரிவித்துள்ளார்.

"இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் கட்சியின் தீவிர உறுப்பினர்கள் பெற்றுள்ள சொத்துக்களை மதிப்பிட வேண்டும்; அதற்காக ஒரு குழுவை நியமித்து விசாரணை செய்ய வேண்டும்; தவறான முறையில் சொத்துக்கள் பெற்றுள்ளதாக நிரூபிக்கப்படுமானால் அந்தச் சொத்துக்களைச் சைப்பற்றவேண்டும்" என்று அகாலி தளத்தின் முன்னாள் தலைவர் ஒருவர் யோசனை கூறியுள்ளார்.

புதிய வரிவிதிப்பு நாடெங்கும் எதிர்ப்பு

கம்யூனிஸ்டுகள்:

புதுடில்லி, மே. 21—

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தில், 'மத்திய அரசாங்கம் விதித்துள்ள புதிய வரிகளை எதிர்த்து நாடெங்கும் இயக்கம் நடத்துவது' என்று முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஜன சங்கம்:

புதுடில்லி, மே. 19—

'மத்திய அரசாங்கம் அறிவித்த புது வரிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யுமாறு நாடு முழுமையிலுமுள்ள ஜன சங்கத்தின் கிளைகளுக்கு அதன் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எம். பி. யின் திட்டம்:

புதுடில்லி, மே. 19—

'பண்டித நேருவுக்கு வேண்டுகோள் அனுப்பியும், கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தியும், ஐக்கிய முன்னணியை ஆங்காங்கு அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தியும் புதிய வரிகளை முறியடிக்க வேண்டும் என்று மக்கள் சபை உறுப்பினர் எஸ். எம். பானர்ஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு-கேரளப் பிரச்சினைகள்

'பகைமை உணர்ச்சியில்லாத முறையில் தீர்த்துக்கொள்ளலாம்'

முதலமைச்சர் வாக்குறுதி

கோவை, மே. 20—

கேரளத்திற்கும்—சென்னைக்குமிடையே உள்ள எல்லைத் தகராறுகளை பகைமை உணர்ச்சியில்லாத முறையில் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும், தண்ணீரைப் பகிர்ந்துகொள்வது சம்பந்தமான பிரச்சினையில் சமரச—நேசப்பான்மையான முறையில் முடிவு காணலாமென்றும் கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாட் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

கொடைக்கானல் ஊராட்சி மன்ற நடவடிக்கைகள்

தமிழிலேயே நடத்தப்படும்

சோழவந்தான், மே 17—

கொடைக்கானல் ஊராட்சி மன்றத்தின் நடவடிக்கைகள் இனி தமிழிலேயே நடத்தப்படும் என்று தெரியவருகிறது. மன்றத்தின் கூட்டத்தில் ஏகமனதாக இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாண்டுங் மாநாட்டிற்கு எதிராக சில 'சக்தி'கள் செயலாற்றினவாம்!

மீண்டும் மாநாடு கூட்டுவது பற்றி அச்சம்?

தோழமை உணர்வு சிதறிவிடுமென்கிறார் பந்த்!

புதுடில்லி, மே 20—

அணு சோதனைகள் போன்ற பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய பாண்டுங்கில் நடைபெற்றதைப் போல் ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் மற்றொரு மாநாட்டை நடத்துவது உசிதமானதுதானா என்பது பற்றி சந்தேகம் கொள்வதாக பண்டித பந்த் தெரிவித்துள்ளார்.

'இப்போதுள்ள நிலைமையில் அத்தகைய மாநாட்டைக் கூட்டுவது உசிதமும் அல்ல—அவசியமும் அல்ல' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"பாண்டுங் மாநாட்டில் செய்யப்பட்ட முடிவுகளுக்கு விரோதமாக சில சக்திகள் மறைமுகமாக வேலை செய்ய ஆரம்பித்தன; இதனால் எல்லா நாடுகளும் சுதந்திரமாகத் தங்களின் சொந்தக் கருத்துக்களை வெளிப்படையாகக் கூற முடியவில்லை; வல்லரசுகளின் தலையீடே இந்த நிலைக்குக் காரணமாகும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே, மீண்டும் பாண்டுங் மாநாடு கூட்டுவதில் பயன் இல்லை என்ற உண்மையை அவர் எடுத்துரைத்து, பாண்டுங்கில் ஏற்பட்ட ஏகோபித்த உடன்பாடும், வெளியான தோழமை உணர்ச்சியும் பாதிக்கப்படாது காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலில் ஈடுபட்டோர் சலுகைகள் கோருவர்!

கண்டிப்பாக நடந்து கொள்ள கலெக்டர்களுக்கு அறிவுரை

ஐதராபாத், மே 20—

தெலிங்கானா பகுதி கலெக்டர்களிடை ஆந்திர மாநில முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி பேசுகையில் சில அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

"இலஞ்ச முறைகளை அறவே ஒழிப்பதற்குக் கலெக்டர்கள் பாடுபட வேண்டும்; அரசியலில் ஈடுபட்டோர் தலையிட்டு சலுகைகள் கோரும் நேரங்களிலும் கலெக்டர்கள் கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டும்; இலஞ்சம் கொடுப்பவர்களிடம் அனுதாபம் காட்டுவது நாட்டையே சீர்குலைத்துவிடும்" என்று எச்சரித்துள்ளார்.

இரண்டாவது கப்பல் கட்டும் துறை?

மைசூரிலா நிறுவப்படும்?

"மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த மேற்குக் கடற்கரைப் பகுதியில் இரண்டாவது இந்தியக் கப்பல் சட்டும் துறை ஏற்படுத்தப்படக் கூடும்"

என்று, மத்திய மராமத்து அமைச்சர் கே. சி. ரெட்டி மூன்றாவது அகில இந்திய மால்நாடு மாநாட்டில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இதற்கான வசதிகளைப் பற்றி ஆராய நிபுணர் குழு ஒன்று இன்னும் இரண்டு திங்களில் மைசூருக்கு வருகிறதாம்.

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மே 20—

"இந்தியாவில் இரண்டாவது கப்பல் தளம் அமைப்பது பற்றிய பூர்வாங்க அறிக்கையைத் தயாரிக்க பிரிட்டிஷ் நிபுணர் குழு ஒன்று செப்டம்பர் மாத மத்தியில் இந்தியாவிற்கு வரும்," என்று மத்திய செய்தி இலாகா அமைச்சர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படுமா?

சென்னை, மே 20—

சென்னையில் மின்சார போர்டு ஒன்றை அமைப்பது சம்பந்தமான வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகிறதாம்.

இந்த நிறுவனம், மாநிலம் முழுமையிலும் மின்சார விநியோகத்தை வர்த்தக அடிப்படையில் நடத்தும் பொறுப்பை ஏற்று நடத்துமாம்.

மின்சாரக் கட்டணங்களைத் திருத்தியமைக்கவும் இந்த நிறுவனம் அதிகாரம் பெற்றதாம். மேலும் கிராமங்களுக்கும், விவசாயத்திற்கும் மின்சார வசதியை தரும் பொறுப்பும் இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுமாம்.

'இயற்கைசதி'க்கு ஈடு!

புதுடில்லி, மே 20—

"வெள்ளம், பஞ்சம், தொத்து நோய் போன்ற இயற்கை விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு உதவியளிக்க ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

"அதை 1957—58-ம் ஆண்டிற்கு ரூ. 7 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது" என்று, மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்துள்ளார்.

தென்னகத்தில் எண்ணெய் ஊற்று?

மூன்று ஜெர்மன் நிபுணர்கள் ஆராய்ந்தனராம்!

ஜெர்மன் நாட்டு எண்ணெய் ஆராய்ச்சி நிபுணர்கள் மூவர், தென்னகத்தில் திருவாங்கூர் கடற்கரை, சென்னை கடறகரை ஓரங்களிலும், திருச்சிராப்பள்ளி, கோதாவரி நதிப் பகுதிகளிலும் புதைந்துள்ள நிலக் கூறுகளை எடுத்து ஆராய்ச்சி நடத்தி வருவதாகவும், ஆதார அத்தாட்சிகளை அவர்கள் சேகரித்திருப்பதால் அவர்களின் இறுதி அறிக்கை இன்னும் தயாராகவில்லை என்றும் மக்கள்சபையில் அமைச்சர் மாளவியா தெரிவித்துள்ளார்.

1957 சனவரி மத்தியில் அந்த ஜெர்மன் நிபுணர்கள் இந்தியாவுக்கு வந்ததாகவும், எண்ணெய் ஊற்று கண்டுபிடிப்பது சம்பந்தமாக நாட்டின் முக்கியத்துவம் உள்ள பகுதிகளில் அவர்கள் ஆராய்ந்தனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

'வற்புறுத்துவதால் இனி பயனில்லை'

வடவர்களுக்கு இடித்துரை

எர்ணாகுளம், மே 20—

"இந்தி மொழியைத் தேசிய மொழி என்று கூறிக்கொண்டு தென்னிந்திய மக்களை இந்தி மொழியைப் படிக்கும்படி வற்புறுத்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. வட இந்தியர்களும் தென் மொழிகளைக் கற்றுக்கொள்ளவேண்டும்; தென்னிந்திய மொழி இலக்கியங்களை அவர்கள் இந்தியில் தாராளமாக மொழி பெயர்த்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் தென்னிந்திய—வட இந்திய மக்களிடையே கருத்துப் பரிமாற்றமும், இடைவிடாத தொடர்பும் ஏற்படும்" இவ்வாறு, திருவாங்கூர்-கொச்சி முன்னாள் முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் கூறியுள்ளார்..

செய்திச் சுருள்

★

புதுக்கோட்டை பாண்டியன் படிப்பகம்

16—4—57ல், புதுக்கோட்டை—சத்தியமூர்த்தி ரோடிலுள்ள பாண்டியன் படிப்பகத்தின் துவக்கமும்—உறுப்பினர்களின் கூட்டமும் நடைபெற்றபோது, படிப்பகத்தின் தலைவராக திரு. சி. பி. பழனியாண்டியும், துணைத் தலைவராக திரு. பெ. கருப்பையாவும், செயலாளர்—பொருள் காப்பாளராக திரு. ப. மணிமொழியையும், துணைச் செயலாளராக எஸ். கிருட்டிணனையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னை சோடா கம்பெனி தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

20—4—57 இரவு 10 மணியளவில், சென்னை—சிங்காரத்தோட்டம், 4-வது தெரு 'உதய சூரியன் அறிவியல் மன்ற' அலுவலகத்தில், சோடா கம்பெனி தொழிலாளர் அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். பி. டி. திராவிடமணி தலைமையில் நடைபெற்றது; அதுபோது, தோழர்கள் எஸ். பி. டி. திராவிடமணி தலைவராகவும், எஸ். சஞ்சீவி துணைத் தலைவராகவும், எஸ். ஆறுமுகம், கே. ஏ. மாரியப்பன் செயலாளர்களாகவும், ம. க. சேகரன் பொருளாளராகவும் ஓ. சி. பாண்டியன் காப்பாளராகவும், 9 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சின்னாளப்பட்டி — கிழக்கோட்டை கே.வி.கே. சாமி நினைவு படிப்பகம்

21—4—57ல், கிழக்கோட்டையில் மேற்படி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ச. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் வீ.அ. சோமசுந்தரம் செயலாளராகவும், கு. செயராம் துணைச்செயலாளராகவும், மு. வெள்ளைச்சாமி பொருளாளராகவும், எஸ். டி. தாஸ், மு. சிதம்பரம் விளம்பர உறுப்பினர்களாகவும், 10 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரசபாளையம் வட்டம்—ரொட்டி பிஸ்கட் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

21—4—57 காலை 9 மணிக்கு இராசபாளையம் நகர தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் பி. சொர்ணம் தலைமையில் மேற்படி சங்க அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் கே. ஆர். பி. மணிமொழியன் தலைவராகவும், பி. சொர்ணம் துணைத் தலைவராகவும், எம். முத்துவேல் செயலாளராகவும், ந. கடக்கரை துணைச்செயலாளராகவும். ஏ. பி. ஆனந்தன் பொருளாளராகவும், 7 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 31-வது வட்டம் மஜீத் நினைவு நூல் நிலையம்

26—4—57 இரவு 8 மணிக்கு அழகிரி நினைவு மன்றத்தில் தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் மேற்படி நூல் நிலைய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் மு. ஜெயிலாப்தீன் செயலாளராகவும், கனகராசன் துணைச்செயலாளராகவும், எஸ். எம். மதார் பொருளாளராகவும், 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாமக்கல் வட்ட - பெரியப்பட்டி முத்தமிழ் மன்றம்

19—4—57ல், மேற்படி மன்ற அமைப்புக் கூட்டம் தோழர் சி. சின்னையா தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பெ. எட்டிக்கண் செயலாளராகவும், பெ. வீ. செல்லப்பன் துணைச் செயலாளராகவும், கா. குழந்தைவேலு பொருளாளராகவும், 10 - பேர் செயற்குழுவினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாம்பனூர் வள்ளுவர் படிப்பகம் திறப்பு விழா

இந்நகர் வள்ளுவர் படிப்பகம் திறப்பு விழா 15—4—57 மாலை 5 மணிக்கு, திரு. கி. இராசகோபாலன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. தோழர்கள் கா. சி. சரீபு செயலாளராகவும், பா. சு. கோவிந்தன் பொறுப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குடந்தை வட்ட உழவர் முன்னேற்ற சங்கம்

18—4—57-ல், மேற்படி சங்கம் அமைக்கப்பட்டு, தோழர்கள் ம. கோ. மணி தலைவராகவும், கு. ஆனைமுத்து துணைத் தலைவராகவும், கு. இராசமாணிக்கம் செயலாளராகவும், நல்லசேவு துணைச் செயலாளராகவும், நா. செல்வதுரை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மன்றத்தின் இலட்சியங்கள் :— பொதுவுடைமைக் கொள்கையை அரசியலாரிடமும், மக்களிடமும் உணரச் செய்தல், தொழிலாளர்களின் கூலி உயர்வுக்குப் பாடுபடுதல், நியாய வாரச் சட்டப்படி உழவர்களுக்கு நீதிகிடைக்கப் பாடுபடுதல் ஆகியவை.

உறையூர் 'உதய நரியன்' படிப்பகம்

12—4—57-ல், உறையூரில் தோழர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் உதய சூரியன் படிப்பகஅமைப்புக்கூட்டம்நடைபெற்றபோது, தோழர்கள் ஏ. விஸ்வநாதன் செயலாளராகவும், கே. பாலன் துணைச் செயலாளராகவும், டி. எஸ். வேம்மையா பொருளாளராகவும், மேலும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—சேப்பாக்கம் அழகிரி மன்றத் துவக்க விழா

14—4—57 மாலை 6 மணிக்கு மேற்படி மன்றத் துவக்க விழாவும் நிர்வாகிகள் தேர்தலும் சேப்பாக்கம் வெங்கடேச நாய்க்கன் தெரு, 6-ம் எண் இல்லத்தில் நடைபெற்றது. திரு. அ. வீ. செகதீசன் தலைமையில், தோழர் நீலநாராயணன் மன்றத்தை துவக்கி வைத்தும், திரு. கா. அப்பாதுரையார் அழகிரி படத் திறப்பு விழாவும் செய்து சொற்பொழிவாற்றினர்.

பொள்ளாச்சி வேலாயுத மன்றம்

14—4—57 மாலை 7 மணி அளவில் வேலாயுத மன்றத்தின் சார்பில் வள்ளுவர் திடலில் ஓர் பொதுக்கூட்டம் எ. கே. கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது தோழர்கள் க. கோபால், பிரகாசு ஆகியோர் சொற்பொழிவாற்றியபின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—அடையாறு அண்ணு படிப்பகம்

20—4—57 இரவு 10 மணிக்கு அடையாறு—வண்ணாந்துறை எல்லம்மன் கோயில் தெருவில் மேற்படி படிப்பகத்தின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஜோதி தலைவராகவும், கோபால் செயலாளராகவும், ஆர். எஸ். மணி துணைச் செயலாளராகவும், வேலு பொருளாளராகவும், மற்றும் 10 பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சோழவந்தான் கே.வி.கே.சாமிபடிப்பகம்

22—4—57-ல் மேற்படி படிப்பகத் திறப்பு விழா தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர் திண்டுக்கல்-சமதர்மமும், மற்றும் பலரும் தோழர் சாமியின் தொண்டினை விளக்கிப் பேசினர்.

உய்யக்கொண்டான்—திருமலை, தி. மு. க. படிப்பகம்

21—4—57 மாலை 6-30 மணி அளவில், தோழர் ந. பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர்கள் கு. பிச்சை செயலாளராகவும், பி. அமலநாதன், துணைச் செயலாளராகவும், ந. பாலசுப்பிரமணியன், ஜி. சேகர், ச. சீனிவாசன், வி. இராமலிங்கம், மூ. ப. சிவம், பி. அமலதாசு, பொ. சீனிவாசன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோடம்பாக்கம்—வடபழனி மக்கள் நல்வாழ்வு மன்றம்

21—4—57-ல் தோழர் புவியாசு தலைமையில் 'மக்கள் நல்வாழ்வு மன்ற' அமைப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் அன்பு செயலாளராகவும், செல்லப்பா, முருகேசன் கூட்டுச் செயலாளர்களாகவும், எழு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருக்குடந்தை உதயசூரியன் படிப்பகம்

21—4—57 இரவு 9 மணிக்கு குடந்தை எண். 11, இரயில்வே ரோடில் "உதய சூரியன் படிப்பகம்" திறக்கப்பட்டு, தலைவராக பி. எம். முருகையன், துணைத் தலைவராக எஸ். ஜெயாராமன், செயலாளர்களாக உ. அய்யூப்கான், ஜி. சீதாராமன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—சைதாப்பேட்டை கே. வி. கே. சாமி படிப்பகம்

23—4—57 இரவு 7 மணிக்கு, சைதாப்பேட்டை - ஜோன்ஸ் ரோடு 1, எண் இல்லத்தில் மேற்படி மன்ற செயற்குழு நடைபெற்றபோது, தோழர்கள் வி. சாமிநாதன் செயலாளராகவும், வே. கணபதி துணைச் செயலாளராகவும், என். குமாரசாமி பொருளாளராகவும், எஸ். ரெத்தினவேல், என். இராசபாதர், என். மணி, எஸ். சீனிவாசன், கு. ஆறுமுகம் செயற்குழுஉறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்சி - தெப்பக்குளம் நாவலர் நெடுஞ்செழியன் படிப்பகம்

27—4—57ல் திருச்சி தெப்பக்குளம் நாவலர் நெடுஞ்செழியன் படிப்பக அமைப்புக் கூட்டம் தோழர் அ. அய்யாசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் வேலவன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர்கள் இளங்கோவன், க. முத்தழகு, பாலு ஆகியோர் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், பொதுக் கூட்டம் நடத்துவதுபற்றி தீர்மானிக்கப்பட்டது.

சென்னை - தண்டையார்பேட்டை கே. வி. கே. சாமி படிப்பகம்

19—4—57 மாலை 6-30 மணியளவில், படிப்பகத்தின் நிர்வாக அமைப்பு கூட்டம் தோழர் டி. பி. சுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் என். சீவரத்தினம் தலைவராகவும், டி. பி. சுந்தரம் துணைத் தலைவராகவும், பொ. சௌந்திரபாண்டியன் செயலாளராகவும், பி. நாகலிங்கம் துணைச்செயலாளராகவும், ஆர். எஸ். சுந்தரம் பொருளாளராகவும் மற்றும் 7 பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை — புது வண்ணையம்பதி அண்ணு படிப்பகம்

28—4—57-ல், தோழர் கே. கோதண்டன் தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; தோழர்கள் எம். கே. தம்பிராசன் செயலாளராகவும், வி. மாணிக்கம் பொருளாளராகவும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முத்துப்பேட்டை இலக்கிய பயிற்சி மன்றம்

27—4—57ல், இராமகிருஷ்ணு ரேசிங் சினிமாவில் நடைபெற்ற கூட்டத்தில், இலக்கியப் பயிற்சி மன்றம் அமைக்கப்பட்டது.

தலைவர் அ. சா. ச. ஐயாவு; துணைத் தலைவர் : ரெ. நாராயணசாமி ; செயலாளர்கள் : ந. தருமலிங்கம், ரெ. க. நாதமணி; பொருளாளர் : எஸ். சுந்தரராசன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பள்ளி ஆண்டு விழா

18—4—57 மாலை 6 மணிக்கு மண்ணச்சநல்லூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா—மாணவர் மன்ற ஆண்டு விழா, திருச்சி மாவட்ட நீதிபதி திரு. எஸ். சிவசுப்பிரமணிய (நாடார்) தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. திரு. எஸ். தங்கவேல் (பிள்ளை) அவர்கள் மக்களை வரவேற்று, பள்ளி ஆண்டு அறிக்கையை வாசித்தார். பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் 'குறள் நெறி' என்ற பொருள் பற்றி அரியதொரு சொற்பொழிவாற்றி மாணவர்களைத் தாய்மொழிப் பற்றுள்ளவர்களாகவும், குறள்நெறி வழுவாது நடப்பவர்களாகவும் இருக்குமாறு வற்புறுத்திக் கூறினர்.

பின்னர் தலைவர் மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர்.

கடம்பத்தூர்—தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வுக் கழகம்

14—4—57 மாலை 4 மணிக்கு மேற்படி கழகத்தின் சார்பில் டாக்டர் அம்பேத்கார் விழா கொண்டாடப்பட்டது. அவ்வமயம் குழந்தைகளுக்கு பால் விநியோகிக்கப்பட்டு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

கருமலை எஸ்டேட் அறிஞர் அண்ணு வாலிபர் சங்கம்

28—4—57 மாலை 6 மணிக்கு, மேற்படி சங்க அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். எஸ். தேவதாஸ் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கே. இராமசாமி தலைவராகவும், எம். எஸ். மணி துணைத் தலைவராகவும், எஸ். எஸ். தேவதாஸ் செயலாளராகவும், இ. ஐயாப் பிள்ளை துணைச் செயலாளராகவும், இ. பி. தேனுமிர்தம் பொருளாளராகவும், எஸ். மாரியப்பன், பி. மாடசாமி விளம்பர உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெல்லை சந்திப்பு - உடையார்பட்டி அழகிரி நினைவு மன்றம்

28—4—57 இரவு 9 மணிக்கு, மேற்படி மன்ற அமைப்புக் கூட்டம் தோழர் டபிள்யூ. டி. துரைசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ஆ. இலட்சுமணன் செயலாளராகவும், சி. ஆழ்வார் துணைச் செயலாளராகவும், அ. ஈனமுத்து பொருளாளராகவும், சு. சுப்பிரமணியம் நகரப் பிரதிநிதியாகவும், 7 பேர் செயற்குழுவினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 26-வது வட்டம் கே. வி. கே. சாமி நினைவு மன்றம்

28—4—57-ல், மேற்படி மன்றத்திற்கு தோழர்கள் பி. பலராம் செயலாளராகவும், ஏ. டி. எஸ். மணி துணைச்செயலாளராகவும், ப. கன்னியப்பன் பொருளாளராகவும், 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உதயசூரியன் நாடக மன்றம்

28—4—57ல் சேலம் மாவட்ட தி. மு. கழக அலுவலகத்தில் உதயசூரியன் நாடக மன்றத்தினை தோழர் கண்ணதாசன் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர்.

கொழும்பு—இலக்கிய மன்றம்

29—4—57 இரவு 8 மணிக்கு மன்றப் பணிமனையில், தோழர் பி. எஸ். ஏ. கனி தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. 1957—58-ம் ஆண்டு நிர்வாகிகளாக தோழர்கள் மு. கா. இராசன் தலைவராகவும், செ. கருணாநிதி செயலாளராகவும், எஸ். கோமதிபாண்டியன் துணைச் செயலாளராகவும், எம். எம். நிசார் பொருளாளராகவும், சவுந்திரபாண்டியன், ஏ. எஸ். மண.வைத்தம்பி, பி. எஸ். ஏ. கனி, இரா. கிருட்டிணன், வி. எஸ். முருகன், கே. எம். முகைதீன், என். சுந்தரம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 4 முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விருதை வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

28—4—57 காலை 10 மணிக்கு இவ்வூர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தின் 17-வது சொற்போர்க்கூட்டம் திரு. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, 'சர்வாதிகாரத்தைவிட ஜனநாயகமே சிறந்தது,' என்ற சொற்போரில் தோழர்கள் ரத்னம், சங்கரநாராயணன், அருணசலம், சிவகாமிநாதன், விவேகானந்தன் முதலியோர் கலந்துகொண்டனர். வாக்கெடுப்பில் தீர்மானம் வெற்றி பெற்றது.

சென்னை-திருவொற்றியூர் அண்ணு படிப்பகம்

28—4—57-ல், திருவொற்றியூரில் அண்ணு படிப்பக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் எம். கே. தம்பிராசன் செயலாளராகவும், வி. அருணசலம் துணைச்செயலாளராகவும், வி. மாணிக்கம் பொருளாளராகவும் 11 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெல்லை நகர் திராவிட முற்போக்கு மன்றம்

28—4—57-ல், நெல்லை நகர் 13-வது வட்ட திராவிட முற்போக்கு மன்றம் அமைப்புக் கூட்டம் தோழர்கள் மணி மன்றவாணன் தலைமையில் நடைபெற்றபோது எஸ். காந்திநாதன் செயலாளராகவும், ஈ. முத்து பொருளாளராகவும், பி. பலவேசம் துணைச் செயலாளராகவும், ஏ. எம். கனி பொருப்பாளராகவும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆத்தூர்—அண்ணு படிப்பகத் திறப்பு விழா

11—4—57 காலை 9 மணிக்கு மேற்படி திறப்பு விழா தோழர் எம்.பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது: தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள் திறந்து வைத்தும், தோழர் ஏ. நாராயணசாமி கொடி யேற்றிவைத்தும் சொற்பொழிவாற்றினர்.

தனியார் வசமுள்ள காடுகளைக் கைப்பற்ற முடிவு

கேரள அரசாங்கம் திட்டமிடுகிறது

திருவனந்தபுரம், மே, 19—

மலபார் பகுதியில் தனியார் வசம் உள்ள காடுகளை அரசாங்கம் கைப்பற்றுவதற்கான சட்டமொன்றைக் கேரள அரசாங்கம் கொண்டு வருமாம்.

சுமார் 1,20,000 சதுர மைல்களுக்கு தனியார் வசம் காடுகள் உள்ளனவாம்.

அரசாங்கம் எற்றுக் கொள்ளும் இந்த முயற்சியில், காடுகளின் சொந்தக்காரர்களுக்கு தவணை முறைகளில் நஷ்டஈடு அளிக்குமாம். முதல் தவணைக்கே மொத்தம் ரூ. 30 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

டெல்லி சர்க்காரின் போக்கு!

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' கதையாக இருக்கிறது!

ஏழைகளின்மீது வரிப் பளுவைச் சுமத்திக்கொண்டே செல்கிறார்கள்!

எப்படி ஏழைகளுக்கு நன்மைசெய்வர்?

சேலம்-குகையில் அண்ணா முழக்கம்

சேலம், மே 20—

சேலம் குகை 28, 29-ம் வட்டத் தி. மு. கழகக் கிளையை 19-ந் தேதி காலையில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. **நெடுஞ்செழியன்** அவர்கள் துவக்கிவைத்தார்.

அன்றையத்தினம் இரவு, அங்கு, தோழர் பி. கோபால கிருஷ்ணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் **அண்ணா** அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தப் பகுதியில் தி. மு. கழகக் கிளையை புதியதாகத் திறந்து வைத்து இங்கு நடைபெறும் கூட்டத்திற்கு படித்த வாலிபரொருவர் தலைமை வகிப்பதைக் கண்டு மகிழ்வடைகிறேன். படித்த வாலிபர்கள் ஏராளமாக பொதுத் துறையில் பங்குகொள்ள வேண்டும். தமிழகத்தில் தேசியக் கட்சியாக விளங்கும் தி. மு. கழகத்தில் படித்த வாலிபர்கள் சேர்ந்து பணியாற்ற நல்ல வாய்ப்பு இருக்கிறது. சமுதாய சீர்திருத்தத்தை மட்டும் தி. மு. கழகம் கொள்கையாக வைத்திருக்கவில்லை.

தி. மு. கழகம்— ஒரு பல்கலைக் கழகம்

"'சாதிபேதங்களை அகற்றுவோம்' என காங்கிரசுக்காரர்கள் கூறுகிறார்கள். 'சாதிகளே கூடாது' என்று தி. மு. கழகம் கூறுகிறது. இம்மாதிரி, மக்களுக்குப் பிடித்தமான பல கொள்கைகள் தி. மு. கழகத்தில் இருக்கின்றன. தி. மு. கழகம் பல்கலைக் கழகம்போல் விளங்குகிறது; அதனால்தான் மக்கள் தி. மு. கழகத்தை அதிகம் நாடுகிறார்கள்.

"பிற கட்சிக்காரர்களிடம் கேட்க முடியாத நல்ல கருத்துக்கள்கொண்ட பேச்சுக்களை தி. மு. கழகத்தினரிடம் கேட்கலாம்.

அடுக்கு மொழிகளிலா மக்கள் மயங்குவார்கள்!

"தி. மு. கழகம் அடுக்கு மொழிகளை அழகாகப் பேசி மக்களை மயக்குவதாகக் காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர். வெறும் அடுக்குமொழிகளால் மட்டும் மக்கள் மயங்கிவிட மாட்டார்கள். பொருளோடு கூடிய அடுக்குமொழியாக இருந்தால்தான் மக்கள் அவற்றிற்கு ஆதரவு அளிப்பார்கள். இதை காங்கிரஸ் தோழர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தப்புக் கணக்கு!

"தி. மு. கழகத்திற்கு கொள்கை இல்லை—திட்டமில்லை' என, இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னை கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். தி. மு. கழகத்திற்குக் கொள்கையும், திட்டங்களும் உண்டு.

"புளியமரத்தினிடம் போய் மாம்பழம் இல்லை என்றும், மாமரத்தினிடம் போய் ஆப்பிள் பழம் இல்லை என்றும் கூறினால் அவை மரங்களின் தவறில்லை. எந்தெந்த மரத்தில் என்னென்ன பழங்கள் இருக்கும் என்று தெரியாமல் இருப்பவர்களின் தப்புதான் அது.

அவர்கள் விரும்பும் கொள்கையா நமக்கு?

"அதேபோல், தி. மு. கழகத்தினிடம் கொள்கை இல்லை—திட்டமில்லை என்று கிருஷ்ணமாச்சாரியும், மற்ற காங்கிரஸ்காரர்களும் சொன்னால் அது தி. மு. கழகத்தின் தவறில்லை. தி. மு. கழகத்தின் கொள்கைகளை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை என்பதையும், அவர்கள் விரும்பும் கொள்கையை தி. மு. கழகம் வைத்திருக்கவில்லை என்பதையும் தான் அது காட்டுகிறது.

கொள்கை மாற்றம்

"டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு 10 வருடங்களுக்குமுன் என்ன கொள்கை இருந்தது? இப்பொழுது என்ன கொள்கை இருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். 10 வருடங்களுக்கு முன் சென்னையில் வெள்ளைக்கார கம்பெனிக்கு லக்ஸ்சோப், கிரைப் வாட்டர் போன்ற பொருள்கள் விற்பனை செய்யும் பிரதான (சோல்) ஏஜெண்டாக அவர் இருந்தார்; இப்பொழுது இந்தியப் பேரரசில் நிதி அமைச்சர் பதவியை வகிப்பதால் காங்கிரஸ் கொள்கையை தற்பொழுது தன் கொள்கையாக வைத்திருக்கிறார். 10 வருடங்களுக்குமுன் வேறு கொள்கையை வைத்திருந்த கிருஷ்ணமாச்சாரி, இப்பொழுது மற்றொரு கொள்கையை கடைபிடிக்கிறார். இவருக்குத்தான் தி. மு. கழகத்தின் கொள்கை தெரியவில்லை.

ரூ. 6,000 அல்லவா?

"முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல், டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறுகின்றார்—'தி. மு. கழகத்திற்கு கொள்கை இல்லை' என்று! மாதம் சுமார் ரூ. 6,000 சம்பளம் வாங்கிக்கொண்டு தற்பொழுது காங்கிரசின் திட்டத்தை அவர் நிறைவேற்றுகிறாரல்லவா?

அவர்கள் எங்கே!

"சட்டசபையில் 150 காங்கிரஸ் உறுப்பினர்கள் அமர்ந்திருக்கிறார்கள்; இராசா சர். முத்தைய செட்டியார், தோட்ட முதலாளி ஏ. வி. தாமஸ் போன்றவர்கள் தான் அதிகம் காங்கிரசில் இருக்கின்றனர். காங்கிரஸ் போராட்டக் காலங்களில் தடியடிபட்டு தியாகம் செய்த பழம் பெரும் காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் 20 அல்லது 30 பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள்.

ஏற்க மறுப்பதேன்?

"இந்திய நாடு - என்று காங்கிரஸ் சொல்கிறது; நாங்கள், 'இந்தியா நாடு அல்ல; இது துணைக் கண்டம்; இந்த துணைக் கண்டத்தில் திராவிட நாடு உள்ளது' என்று கூறுகிறோம். இதை ஏற்க காங்கிரஸ்காரர்கள் மறுக்கிறார்கள்.

இதுவா சமதர்மம்?

"சமதர்மத்தைப் பரப்புவதாகக் கூறும் காங்கிரசார், மேலும் மேலும் முதலாளிகளைக் கொள்ளை இலாபம் அடிக்க விடுவானேன்? சமதர்மம் என்று சொல்லிக்கொண்டு ஏழைகளின் மீது தானே வரிப் பளுவைச் சுமத்துகிறார்கள்? இதுதான் சமதர்மமா? முதலாளித்துவத்தை ஒழித்தால்தான் சமதர்மம் உண்டாகும் என்று நாங்கள் கூறுகிறோம்; இது தவறா?

இரட்டைத் தாழ்ப்பாள் நிலை ஏன்?

"90 பொருள்களுக்கு இந்த வருடத்தில் இந்தியப் பேரரசினர் புதிய வரிகளை விதித்து இருக்கின்றனர். புதிய வரி விதிப்பின் மூலம் சுமார் ரூ. 78 கோடி அதிக வருமானம் கிடைக்கும் என்று கூறுகின்றனர். இதில் ரூ. 53 கோடியை இராணுவத்திற்காகச் செலவு செய்யப் போவதாகக் கூறுகின்றனர். ஏற்கெனவே இராணுவத்திற்காக சுமார் ரூ. 200 கோடி செலவு செய்கின்றனர்.

"இராணுவத்திற்காக செலவு செய்வது மிகவும் அதிகம் என்று நாங்கள் முன்பிருந்தே சொல்லிக்கொண்டு இருக்கும்பொழுது, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று கூறுவதுபோல், இந்த ஆண்டு இராணுவச் செலவை இன்னும் அதிகரித்து இருக்கிறார்கள்.

புரிந்துகொள்ள இயலாத கோளாறு

"இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லி வருவதால், பாகிஸ்தானுக்கு சாதகமாக நாங்கள் பேசுவதாகக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பி. இராமமூர்த்தி ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டாராம். எங்களுடைய கருத்தை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

வெல்ல முடியுமா?

"இன்னும் எவ்வளவுதான் அதிகமாக இராணுவத்திற்குச் செலவு செய்தாலும், யுத்தம் ஏற்பட்டால் பாகிஸ்தானை இந்தியா வெல்ல முடியாது. காரணம் என்ன? பாகிஸ்தான் அரசினர், அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனர்; யுத்தம் ஏற்பட்டால், ஆயுதம் அனுப்பும்படி பாகிஸ்தான் கேட்டால் அமெரிக்கா இலவசமாகவே அணுகுண்டுகளை பாகிஸ்தானுக்குக் கொடுக்கும். அணுகுண்டுகளுக்கு முன் இந்தியா என்ன செய்ய முடியும்? அதனால் தான் சொல்லுகிறேன்—'இன்னும் எவ்வளவு அதிகப்படியாக செலவு செய்தாலும் பாகிஸ்தானை இந்தியா வெல்ல முடியாது'—என்று!

குறையுங்கள் இராணுவப் பயிற்சி அளியுங்கள்

"இராணுவச் செலவை இந்தியப் பேரரசினர் குறைக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவருக்கும் இராணுவப் பயிற்சியை அரசியலார் அளிக்கவேண்டும். அவசியம் ஏற்படும்பொழுது அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து அவர்களின் பயிற்சியை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஏழைகளுக்கு உதவியா செய்கின்றனர்?

"வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் அஞ்சல் அட்டையின் விலை அரையணாவாக இருந்தது; இப்பொழுது அதை ஓரணாவாக உயர்த்தியுள்ளனர் இந்தியப் பேரரசினர்! இந்த மாதிரி புதிய வரி விதிப்பின் மூலம் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள்தானே! ஏழைகளின்மீது வரிப் பளுவை சுமத்திக்கொண்டே போகும் இவர்கள், ஏழைகளுக்கு உதவி செய்வதாகக் கூறுகின்றனர்.

கொச்சைத் தமிழானாலும் கருத்துக்கள் உண்டு

"காங்கிரஸ்காரர்களும் அடுக்கு மொழி பேச முயற்சி செய்கிறார்கள். வெறும் அடுக்கு மொழிகளால் மட்டும் மக்களை வசப்படுத்த முடியாது என்று மீண்டும் சொல்லுகிறேன். பெரியார் ஈ. வெ. இராமசாமி அடுக்குமொழி பேசியா மக்களை வசப்படுத்துகிறார்? ஈ. வெ. ரா. கொச்சைத் தமிழ்தானே பேசுகிறார்? ஈ. வெ. ரா. பேசுவது கொச்சைத் தமிழாக இருந்தாலும், மக்கள் அவற்றை ஆவலோடு கேட்கிறார்கள். காரணம் என்ன? பெரியாரின் கொச்சைத் தமிழில் கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, ஒருவர் பேசுவதுபோல் பேசுவதால் மட்டும் மக்களை வசப்படுத்த முடியாது என்றும், பேச்சில் பொருள் இருக்க வேண்டும் என்றும் இதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ளலாம்."

சிந்துபூந்துறையில் பொதுக்கூட்டம்

23—5—57 இரவு 7 மணிக்கு, திருநெல்வேலி — சிந்துபூந்துறை கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில், வெற்றி பெற்ற கழகத் தோழர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும்முகத்தான், சிந்துபூந்துறை—சாலைத் தெருவில் ஓர் பொதுக் கூட்டம், வழக்கறிஞர் இரத்தினவேல்பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழியர் சத்தியவாணி முத்து எம்.எல்.ஏ. அவர்களும், தோழர் டபிள்யூ. டி. துரைசாமி அவர்களும் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

23—4—57 மாலை 7 மணியளவில், சென்னை—47-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் வடிவண்ணன் தலைமையில் 'தமிழ் ஆட்சி மொழி' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணம்

24—5—57 காலை 7 மணிக்கு இராமநாதபுரம்தோழர் கோகலே —தோழியர் செயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா, இராமநாதபுரம்—இராணிச் சத்திரத் தெரு, எண் 3/31 இல்லத்தில் நடைபெறும்.

நெய்வேலிப் பகுதியில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் அனுமதியுடன் அவர்களை 11,000 ஏக்கர் நிலத்தில் குடியமர்த்த பொறுப்பேற்கப்பட்டிருக்கிறதாம்.

அதிகபட்சம் ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் அளிக்கப்படும். இது நஷ்டஈடாகத் தரப்படுவதுடன் இலவசமாகவும் தரப்படுகிறதாம்.

மேலும் இந்தப்புதிய இடத்தில் பள்ளிக்கூடங்கள், சமூக நிலையங்கள், குடிதண்ணீர் வசதி, தெரு விளக்கு முதலியன இலவசமாக ஏற்படுத்தப்படுமாம்.

இலங்கை வாழ்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டிருப்பவர்களுக்கு 'விசா' முதலியன புதுப்பிப்பது போன்ற வற்றில் ஏராளமான கஷ்டங்கள் இருக்கின்றன; அதன் விளைவாகப் பல இந்திய குடிமக்கள் இலங்கையை விட்டே வந்துவிட்டனர்."

கழகக் கூட்டங்கள்

★

புதுக்கரையூர் :
(நெல்லை மாவட்டம்)
23—5—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். மருதவாணன்
பேசுவோர்:
நாஞ்சில் பி. இ. கண்ணப்பா
திராவிடமணி

★

கீழவளவு :
(மதுரை மாவட்டம்)
மந்தைத் திடலில்
24—5—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : மு. க. இளமொழி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து
பி. சமதர்மம்

★

கடையம் :
(நெல்லை மாவட்டம்)
24—5—57 இரவு 8 மணிக்கு
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எல். எல். ஏ.
வை. அருணாசலம்

★

நெல்லை-மேலப்பாளையம்:
ஜின்னா திடல்
(5-பூ கம்பெனி எதிரில்)
தலைவர் : வி. இ. என். மீரான்
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
இரத்தினவேல் பாண்டியன்
டபிள்யூ. டி. துரைசாமி
(தேதி குறிப்பிடவில்லை)

★

ஏர்வாடி :
(நெல்லை மாவட்டம்)
அண்ணா திடலில்
24-5-57 இரவு 8-30 மணிக்கு
தலைவர் : எஸ். கந்தசாமி
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
என். பி. எம். அப்துல்காதர்
டபிள்யூ டி. துரைசாமி
சி. பி. சேது

★

மின்னாம்பள்ளி :
(சேலம் மாவட்டம்)
24-5-57 இரவு 10½-மணிக்கு
தலைவர் : மு. அழகப்பன்
பேசுவோர் :
அண்ணா
எம்.பி.சுப்பிரமணியம் M.L.A.

★

காட்டூர் :
(சேலம் மாவட்டம்)
24—5—57 காலை 9 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
எம். பி. சுப்பிரமணியம் M. L. A.
பேசுவோர் :
அண்ணா
ஜி. பி. சோமசுந்தரம்

★

மேட்டுப்பாளையம்:
(திருச்சி மாவட்டம்)
பஸ் நிலையத் திடலில்
24—5—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். இராமலிங்கம்
பேசுபவர் :
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
(தோழர் மு. கருணாநிதி அவர்களால், கர்காலி, பிள்ளாபாளையம் ஆகிய கிளைக் கழகங்களில் கொடியேற்று விழாவும், மேட்டுப்பாளையம் பாவோடியில் நூல் நிலையத் திறப்பு விழாவும் நடைபெறும். மேட்டுப்பாளையம் ஊராண்மைக் கழகத்தாரால் தோழர் கருணாநிதி அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.